மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09 ம் நாள் திங்கள்கிழமை
இடைநிலை மனு எண்.05/2025
இன்
அசல் வழக்கு எண்.109/2023
–––––––

கெங்காலட்சுமி .. மனுதாரர்/6 ம் பிரதிவாதி

/எதிர்/

எ. பாலமுருகன் .. எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 30.01.2026 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/6 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. இராஜேஸ், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. வி. முத்தரசன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை, மனு, அபிடவிட்டு மற்றும் எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது தாவா அசல் வழக்கில் மனுதாரர்/6 ம் பிரதிவாதிக்கு எதிராக கடந்த 30.04.2024 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி கட்டளை 9 விதி 7 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்/6 ம் பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்**–

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 6 ம் பிரதிவாதி. தாவா அசல் மனுவில் கடந்த 30.04.2024 ம் தேதி மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்தது. மனுதாரர் கடந்த 29.04.2024 ம் தேதி வீட்டில் வழுக்கி விழுந்ததன் காரணமாக அவரது காலில் தசைபிடிப்பு ஏற்பட்டு வீட்டில் கட்டாய ஓய்வில் இருந்து வந்ததன் காரணமாக அன்றைதினம்

நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. மேலும் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்ய இயலாமல் போனது. இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாக ஏற்பட்டது. தாவா அசல் வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது. எனவே இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு ஏராளமான கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல்.

3. <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்–</u>

**3.1.** இதில் வியக்கதக்கதாய் ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர ஏனைய சங்கதிகள் இந்நிர் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மறுக்கப்படுகிறது. அவைகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள தாவா அசல் வழக்கு வாதியின் தகப்பனார் லேட். எல்லப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்ட ஒரே சொத்தில் தனக்கு உரிய 4ல் 1 பங்கு பாகப்பிரிவினை வேண்டி தாக்கல் சய்துள்ள வழக்காகும். லேட். எல்லப்பன் மறைவிற்கு பிறகு அவரின் சட்டப்படியான வாரிசுதாரர்கள். இந்நிர் எதிர்மனுதாரர்/வாதி வெளியூரில் வேலை செய்வதை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு வாதிக்கும் உரிய பங்கினையும் சேர்த்து மறைத்து பிராது தபசில் சொத்தில் சட்ட விரோதமாக வில்லங்க பரிமாற்றங்கள் செய்துள்ளனர். மனுதாரர் கோருவது மருத்துவ சிகிச்சையில் இருந்திருந்தால் மருத்துவ ரசீது ஒரு ஆவணமாக இணைத்திருப்பார். கடந்த 30.04.2024ம் தேதியிலிருந்து இந்நிர் மனு கடந்த 16.07.2025ம் தேதி அதாவது 1வருடம் 2 மாதம் 17 நாட்கள் வரை எந்த காரணத்திற்காக தாக்கல் செய்யவில்லை என்பதை உரிய சான்றாவணங்கள் மூலம் விளக்கம் அளித்து தன் தரப்பு நல்ல கட்சியினை நிரூபிக்க வேண்டும்.

3.2. கடந்த 01.08.2024ம் தேதி தாவா அசல் வழக்கில் வாதி தரபபில் முதல் விசாரணை மேற்கொண்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு சிரரணை செய்ய நிலுவையில் இருக்கின்றது. அவ்வாறென்றால் அசல் வழக்கு இறுதி கட்ட விசாரணையில உள்ளது என்று பொருள். அசல் வழக்கில் இந்நிர் எதிர்மனுதாரர்

கோருவது அவருக்கு பாத்தியப்பட்ட 4ல் ஒரு பங்கினை மட்டும் தான் என்பது குறிப்பிடததக்கது. பிரிவினையற்ற தபசில் சொத்தை கிரையம் பெற்ற இந்நிர் மனுதாரர்/6ம் பிரதிவாதி உரிய அசல் வழக்கு தாக்கல் செய்யும் உரிமை மட்டுமே உள்ளது. எனவே இந்நில் அசல் வழக்கில் சட்ட சமன் நிலையும் அடிப்படை காரணங்களும் எதிர்மனுதாரர்/வாதி பக்கமே உள்ளது. எனவே மனுதாரர்/6ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவை இந்த எதிர்மனுதாரர்/ வாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. <u>தீர்வு</u>**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 6ம் பிரதிவாதி. கடந்த 30.04.2024ம் தேதியில் மனுதாரர்/6ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர் கூறும் காரணம் என்னவென்றால், மனுதாரர்/6ம் பிரதிவாதி கடந்த 29.04.2024ம் தேதி வீட்டில் வழுக்கி விழுந்த காரணத்தினால் வீட்டில் கட்டாய ஓய்வில் இருந்ததால் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என்று மனுவில் குறிப்பிட்டுள்ளார். எனவே மனுதாரர்/6ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** எதிர்மனுதாரர் தன்னுடைய எதிருரையில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டு காரணங்கள் தெளிவாக கூறவில்லை. மேலும் Good Cause விளக்கமின்றி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கினை காலம் தாழ்த்த வேண்டுமென்ற காரணத்திற்காக மனுதாரர் தாக்கல் செய்துளள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**6.3.** மனுதாரர்/6ம் பிரதிவாதி கடந்த 29.04.2024ம் தேதி வீட்டில் வழுக்கி

விழுந்ததால் கட்டாய ஓய்வில் இருந்த காரணத்தினால் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என்பது குறித்தும், எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததிலிருந்து மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணம் போதுமானதாக இல்லை. இருந்த போதிலும் வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டு மனுதாரருக்கு ஒரு வாய்ப்பளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர் மனுவில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என உத்தரவிடப்படுகிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09-ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.05/2025
இன்
அ.வ.எண்.109/2023
உத்தரவு
நாள்-09.02.2026.